யில் சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை தொடர்பான பத்திகள் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த பத்தாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவை) யில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய எண்பத்தி ஏழாவது அறிக்கை.

6. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1978-79 ஆம் ஆண்டுக்கான (சிவில்) அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த இருபத்தி மூன்றாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் முப்பத்தேழாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவை)யில் மக்கள் நல்வாழ்வு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மற்றும் குடும்ப நலத்துறை குறித்து மேலும் தொடரப்பட்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய எண்பத்தி எட்டாவது அறிக்கை.

7. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளின் மீது பொதுக் கணக்கு குழு அளித்த பதினோராவது அறிக்கை (ஒன்பதாவது பேரவை) யில் உள் துறை குறித்த பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய எண்பத்தொன்பதாவது அறிக்கை.

(ஆ) அரசு உறுதி மொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு உறுதி மொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ரமணி நல்லதம்பி, அரசு உறுதி மொழிக் குழுவின் தலைவர்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதி மொழிக் குழுவின், பத்தாவது சட்டமன்றப் பேரவையின் 7 வது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

6. வரவு-செலவுத்திட்டம், 1993-94, பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993-94 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம், டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை. 5 நிமிடங்கள்.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி